[1979 மார்ச் 5

சென்னை-கோவை விரைவுப் பேருந்துப் பணி.

*வினா எண். 231— திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து கோவைக்கு சென்னை-பூந்தமல்லி-காஞ்சிபுரம்-செய்யாறு-ஆரணி-போளூர்-திருவண்ணாமலை- சங்கராபுரம் - கள்ளக்குறிச்சி-சின்னசேலம்-ஆத்தூர்-சேலம் வழியாக விரைவுப் பேருந்துவிட அரசு முயற்சி ஏதும் மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இல்லை.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லியிருக்கின்ற இந்த வழித்தடமானது தொழில்துறைப்யைச் சேர்ந்த சர்க்கரை ஆலைகள் எல்லாம் இருக்கின்ற இடமாக இருக்கிறது. ஆகவேதான் இதைக் கேட்டிருக்கிறேன். மேலும் நேற்று நான் நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு வரும் விரைவு வண்டியில் திண்டிவனத்திலிருந்து வந்தபோது, மூட்டைப் பூச்சி மட்டுமல்ல, பெயர் சொல்ல முடியாத அளவுக்கு உள்ள பூச்சிகள் எல்லாம் என் மேல் கடித்து வீக்கம் இருக்கிறது. டி.டி.டி. அடித்து மிக நாட்கள் ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் எல்லாம் டி.டி.டி. அடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட முதல் துணைக் கேள்விக்கு அவர்கள் கூறியிருக்கின்ற பூவிருந்தவல்லி-காஞ்சிபுரம்-செய்யார்-சேலம் வழியாகக் கோவைக்கு ஒரு புதிய தடத்தில் பேருந்து விட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை முற்றுப்பெறும் என்ற எண்ணத்தோடு-அதில் பேருந்து விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும் எந்தப் பேருந்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று தெரிவித்தால் கண்டிப்பாக அந்த குறைபாடுகளைப் போக்குவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: சென்னையிலிருந்து கோவைக்கு பல்லவன் போக்குவரத்து பேருந்து காலையிலிருந்து மாலை 5½ மணி வரை போவதில்லை. ஆகவே சில ரூட்டுகளில் நேரடியாக கோவைக்கு காலை ஐந்து மணியிலிருந்து மாலை ஐந்து மணிக்குள் பேருந்து விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

1979 மார்ச் 5]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல், காலை நேரத்தில் பேருந்து விட்டால் அது பயணிகளுக்குப் பயன்படுமானால் அதைப் பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரை முத்துசாமி: நான் பிரயாணம் செய்த வண்டி 551-எ நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு வந்த வண்டி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு தற்பொழுது ஒரு எக்ஸ்பிரஸ் பஸ் வந்து கொண்டிருக்கிறது. இதில் தினமும் 1,500 ரூபாய் முதல் 1,700 வரை வசூலாகின்றது. லாபகரமாகவும் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆகவே மேலும் ஒரு எக்ஸ்பிரஸ் வண்டி சென்னைக்கு பரமக்குடி வழியாக விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை ஆய்வு செய்யப்படும்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் கொள்கை மேலும் அதிகமான பேருந்துகளை விட வேண்டும் என்றிருந்த போதிலும், ஏற்கனவே வேலூரிலிருந்து தஞ்சாவூருக்கும் நாகப்பட்டினத்திற்கும் போய்க் கொண்டிருந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. என்ன காரணத்தினால் நிறுத்தப்பட்டிருக்கிறது? தொடர்ந்து இதை விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும் கடலூரிலிருந்து திருப்பதிக்குப் போய்க் கொண்டிருந்த பேருந்தும் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கும் என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரிலிருந்து திருப்பதிக்குச் செல்லுகின்ற அந்த வழித் தடத்தில் பேருந்து விடப்பட்டு, போதுமான வருமானம் இல்லாத காரணத்தாலும், திருப்பதி-கடலூரை இணைக்கின்ற பேருந்துகள் பல இருக்கின்ற காரணத்தாலும் அது தொடர்ந்து செயல்படவில்லை. அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் தஞ்சை-நாகை வழித் தடமும் அதே காரணத்தால் ஏற்படுத்தவில்லை. எந்த வழித் தடங்களில் வருமானம் வரக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவோ அந்த வழித் தடங்களில் பேருந்துகள் விட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அதோடு, லிமிடெட் ஸ்டாப்பிங் என்ற முறையில் துரித வண்டிகள் விடுவதன் மூலம் சில குறைகளை நிவர்த்திக்கலாம் என்ற நோக்கத்தோடு, அடுத்த மாதத்திலிருந்து அவ்வாறு லிமிடெட் ஸ்டாப்பிங் துரித வண்டிகள் விடுவதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கும்-வேதாரண்யத்திற்கும் இடையே பேருந்து ஓடிக்கொண்டிருந்தது. அந்தப் பேருந்து இடையிலே நிறுத்தப்பட்டு, மறுபடியும் அமைச்சர் அவர்கள் முயற்சியாலே ஓட்டப்பட்டு, மீண்டும் நிறுத்தப்பட்டிருக்கிறது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றார் என்பதற்காக எங்கேயோ கேள்விகள் போய்க் கொண்டிருக்கின்றன. மூலக் கேள்விக்கு ஒட்டியதாக துணைக் கேள்வி போடவேண்டும். தவிர, நானும் நேரத்தை மிச்சப்படுத்தியாக வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி: முக்கியமான பிரச்சினையைப்பற்றி அவர் கேட்கின்றார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவல்ல பிரச்சினை. துணைக்கேள்விகள், மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்க வேண்டும். இப்படிக் கேள்விகள் கேட்டுக் கொண்டே இருந்தால், எனக்கு நேரமில்லை.

திரு. பொ. உத்திராபதி: விரைவிலே அந்த பஸ்களை விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பேருந்து விடப்பட்டு நிறுத்தப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அது பற்றி என்னிடம் தகவல் இல்லை. தகவலை அறிந்து, தக்க நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீண்ட தூரம் செல்லக்கூடிய பேருந்துகளில், அவைகள் வழியில் நின்று விட்டாலோ அல்லது ரிப்பேர் செய்ய வேண்டுமென்றாலோ, ஜாக்கி, டயர் போன்ற ஸ்பேர்பார்ட்ஸ் இல்லை. ஆகவே, இந்த நீண்ட தூரம் செல்லக்கூடிய பேருந்துகளில் ஸ்பேர் பார்ட்ஸ் வைத்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது கடந்தகால அனுபவமாக இருக்கலாம். நான் ஏற்கனவே சட்டமன்றத்தில் கூறியதுபோல், தக்க நடவடிக்கைகள் எடுத்து அனைத்து துரிதப் பயண பேருந்துகளிலும் ஜாக்கி போன்ற பொருள்கள் அங்கே வைக்கப்பட்டிருக்

கின்றன. குறிப்பிட்ட பேருந்துகளில் அப்படி ஏதாவது தவறுகள் இருப்பதை உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. வி.கொ. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து கோவை செல்லுகின்ற வண்டிகள், பவானி, சித்தோடு, அவிநாசி மூலமாக கோவை அடைவதும், அல்லது ஈரோடு, பெருந்துறை, அவிநாசி மூலமாக கோவை அடைவதும், அதேபோல் ஈரோடு வருகின்ற பஸ்கள் கோபிசெட்டிப்பாளையம், சத்தியமங்கலம் வழியாக கோவை செல்லுவதற்கும் புதிய ஏற்பாட்டை அரசு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, துரித வண்டிகளினுடைய வருவாயைப் பெருக்குகின்ற வகையில் அது அமைய வேண்டும். அது முடியுமா, முடியாதா என்பதைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பெண்ணை ஆற்றின் கரைகள்.

* வினா எண். 232— திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மிகவும் தாழ்வாக உள்ள பெண்ணை ஆற்றின் கரையினை காவனூர் என்ற ஊரிலிருந்து பகண்டைவரை உயர்த்தி ரிவிட்மெண்ட் கட்டி பலப்படுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம். பெண்ணை ஆற்றின் வலது கரையில் வீராணம் குழாய் கடக்கும் இடத்திற்கும் குமாரமங்கலம் தலைமதகுக்கும், இடைப்பட்ட தூரத்தில் கரையை வலுப்படுத்த ரூ. 4·67 லட்சத்திற்கும், பெண்ணையாற்றின் வலதுகரையில் வீராணம் குழாய் கடக்கும் இடத்திற்கும் மேற்கே உள்ள கரையை பலப்படுத்த ரூ. 3·85 லட்சத்திற்கும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. தவிர பகண்டை கிராமத்தின் அருகே பெண்ணையாற்றின் வலது கரையை சீரமைக்க ரூ. 4·85 லட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அது தல அலுவலர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, நான் கூறியுள்ள காவலூர் என்ற ஊரிலிருந்து பகண்டைவரை பெண்ணையாற்றின் தென்புறம் பூராவும், பள்ளமாக இருக்கின்ற காரணத்தால், வெள்ளம் வருகின்றபோது பல கிராமங்கள்